©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 25] சென்னை, புதன்கிழமை, ஜூலை 1, 2009
ஆனி 17, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 15, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 24 பிப்ரவரி 2009.]*

புதுடில்லி, மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தில் 31–12–2008ஆம் நாளன்று உருவாகி, 31–12–2008ஆம் நாளிட்ட ***இந்திய அரசிதழின் சிறப்பு*** வெளியீட்டில் பாகம் II, பிரிவு 3, உட்பிரிவு (i)-ல் வெளியிடப்பட்ட (ஆங்கிலத்தில்) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அறிவிக்கை, பொதுமக்களின் தகவலுக்காக இதனால் மீண்டும் வெளியிடப்படுகிறது.

**G.S.R.2(E).**—1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்களின் சட்டத்தின் (10/1955) 3ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு 1993ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் ஆணையில் (பயன்பாட்டை கட்டுப்படுத்துதல் மற்றும் உச்ச வரம்பு விலையை நிர்ணயித்தல்) மேற்கொண்டும் திருத்தம் செய்வதற்காக, கீழ்க்காணும் ஆணையை இதனால் இயற்றுகிறது, அவையாவன:—

**1.** (1) இந்த ஆணை, 2008ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (பயன்பாட்டை கட்டுப்படுத்துதல் மற்றும் உச்சவரம்பு விலையை நிர்ணயித்தல்) ஆணை எனப் பெயர்பெறும்.

(2) இது, அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**2.** 1993ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல் மற்றும் உச்சவரம்பு விலையை நிர்ணயித்தல்) ஆணையில்,

(1) பகுதி 2–ல் (a) இனம் (ga) விட்டுவிடப்பட வேண்டும்.

(b) இனம் (ka) விட்டுவிடப்பட வேண்டும்.

(2) பகுதி 8 A விட்டுவிடப்பட வேண்டும்.

**3.** பகுதி **9–ன்** துணைப்பகுதி (a)-ல் ''மண்ணெண்ணெயில் மார்க்கரின் அளவை நிர்ணயம் செய்வதற்காக, மண்ணெண்ணெயின் மாதிரியைப் பெற்று, சோதனைக் கருவியின் உதவியுடன் சோதனை செய்தல்'' என்ற சொற்கள் விட்டுவிடப்படவேண்டும்.

**குறிப்பு:**—முதன்மை ஆணை, இந்திய அரசிதழில் வெளியிடப்பட்டு **(**காண்க எண் G.S.R.584(E) நாள்: **2–9–1993)** பின்னர் திருத்தியமைக்கப்பட்டது.

**காண்க:—**

**(1)** எண் G.S.R. 509 (E) நாள் **19–6–1995**

**(2)** எண் G.S.R. 126 (E) நாள் **8–3–1996**

**(3)** எண் G.S.R. 638 (E) நாள் **21–10–1998**

**(4)** எண் G.S.R. 105 (F) நாள் **22–2–2001**

**(5)** எண் G.S.R. 405 (F) நாள் **6–7–2006**

**(6)** எண் G.S.R. 19 (E) நாள் **12–1–2007**

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்பட்டது.)

**கே. சண்முகம்,**
*அரசுச் செயலாளர்,*
*கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.